1981 ஆகஸ்ட் 24]

கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம், வீரியங்கோட்டை.

*வினா எண். 30—திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணித் தொகுதி டி. 1218-வீரியங்கோட்டை கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் நிர்வாகக் குழு பற்றிய துணை விதி திருத்தம் செய்யப்பட்டு இதுவரையில் அமுல்படுத்தப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) கால தாமதம் ஏற்படுவதற்குரிய காரணத்தை அறிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) தஞ்சாவூர் வட்டார இணைப்பதிவாளரின் 1979-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ஆம் நாள் தீர்ப்பாணை மீது மேல்முறையீடு நிலுவையாய் இருந்ததால் இணைப்பதிவாளர் முன்மொழிந்துள்ள துணைவிதித் திருத்தம் அமுலாக்கப்பட முடியாமல் உள்ளது.

(ஆ) எந்தக் காரணக்கூறு (factor) அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பது முடிவு செய்ய வேண்டியிருந்தது. தற்போது மக்கள் தொகை அடிப்படையில் சங்க நிர்வாகக்குழுவில் பிரதிநிதித்துவம் அளிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள கிராமங்களுக்கான குடிநீர்த் திட்டம்.

*வினா எண். 31—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கோவில்பட்டித் தாலுக்காவிலுள்ள சிந்தலக்கரை துரைச்சாமிபுரம், ஆர். வெங்கடேசுவரபுரம் ஆகிய கிராமங்களுக்கு எட்டயபுரம் வரை வரும் தாமிரபரணி தண்ணீரைக் கொண்டு செல்ல அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தாமிரபரணி ஆற்றை ஆதாரமாகக் கொண்டுள்ள எட்டையபுரம் குடிநீர்த் திட்டத்தில் இம்மூன்று சிற்றூர்கள் சேர்க்கப்படவில்லை. இருப்பினும் சீனியம்பட்டி என்னும் சிற்றூரில், ரூபாய் 8.77 இலட்சம் செலவில் ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து, அம்மூன்று சிற்றூர்களுக்கும் குடிநீர் வழங்க ஒரு திட்டம், குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 கிராமங்களிலும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக போர் வெல் போட்டு பார்த்ததில் சரியான நல்ல தண்ணீர் இல்லாததன் காரணமாக 8 மைலுக்கு அந்தப் பக்கத்திலே இருந்து தண்ணீர் கொண்டு வருவது பற்றி ஆராய்ந்து அதுவும் சரியான தண்ணீராக இல்லாத காரணத்தால் அந்த மக்களுக்கு சரியான குடி தண்ணீர் கிடைக்காமல் இருக்கின்றது. ஆகவே எட்டையாபுரம் வரை வருகின்ற தாமிரபரணி தண்ணீரை இந்தக் கிராமங்களுக்குக் குடிப்பதற்கு வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையினை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் இருக்கிற தகவலைச் சொல்கிறேன். இந்தத் திட்டத்திலிருந்து வழங்க எட்டையபுரம் பேரூராட்சியின் சம்மதம் கிடைக்கவில்லை என்று குறிப்பு இருக்கிறது. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, சம்மதம் கிடைத்ததாகத் தகவல் இருந்தால், என்னிடம் பாஸ்-ஆன் செய்தால், அதன் மேல் நடவடிக்கை எடுக்கும்படி செய்யலாம். என்னிடம் இருக்கிற குறிப்பில் எட்டையபுரம் பேரூராட்சியின் சம்மதம் கிடைக்கவில்லை என்று மட்டும் தான் இருக்கிறது. இதன் காரணத்தினால், மேற் குறிப்பிட்ட சிற்றூர்களில் இருந்து 15 மைல் தொலைவில் இருக்கும் சீனியப்பட்டி என்னும் சிற்றூருக்கு அருகில் நில நீர் ஆய்வு செய்யப் பெற்று, ஆழ் துளை குழாய்க் கிணறு அமைக்க இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இது நல்ல தண்ணீர். இதிலிருந்து தண்ணீர் கொடுப்பதாகத் திட்டம் இருக்கிறது. மாற்று யோசனை ஏதாவது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால், அதையும் கவனிக்கலாம்.

சட்டமன்றம் LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கடலாடிப் பகுதியைச் சேர்ந்த கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*வினா எண் 32—திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கடலாடி பகுதியைச் சேர்ந்த 84 கிராமங்களுக்கு கூட்டு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை?

(ஆ) திட்டமிட்டபடி தண்ணீர் எடுக்க சாத்தியக்கூறு உள்ளதா ?

(இ) இல்லையெனில் மாற்றுத் திட்டம் ஆய்வில் உள்ளதா?